# கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

## மூன்றாம் வருட/இரண்டாம் அரையாண்டு பொதுக் கலைமாணித் தேர்வு – 2012/2013 (மார்ச்/ஏப்ரல் 2015)

## GEO 3201 இலங்கைப் புவியியல்

01 JUN 2015
UNIVERSITY, SRI LANKA

நேரம் : 03 மணித்தியாலங்கள்

பகுதி – I இல் இருந்து இரு வினாவையும் பகுதி – II இல் இருந்து இரு வினாக்களையும் தெரிவுசெய்து எல்லாமாக நான்கு வினாக்களுக்கு விடை தருக.

### பகுதி – I

01. இலங்கையின் புவி வெளியுருவவியல் தன்மையில் காணப்படும் வேறுபட்ட பண்புகளே தரைத்தோற்ற உருவாக்கம் தொடர்பில் ஒன்றுக்கொன்று முரண்பாடான கருத்துக்கள் உருவாவதற்கு அடிப்படையாக அமைந்துள்ளது என்ற கருத்தை நியாயப்படுத்த நீர் முன்வைக்கும் விளக்கம் யாது?
(25 புள்ளிகள்)

02. (அ) இலங்கையின் கால நிலையை நிர்ணயிப்பதில் செல்வாக்கு செலுத்தும் காரணிகள் யாவை?
(10 புள்ளிகள்)

(ஆ) அண்மைக்காலமாக இலங்கையில் காலநிலையில் அவதானிக்கப் பட்டுவரும் தளம்பல் நிலைமைக்கான காரணங்கள் இரண்டினைக் குறிப்பிட்டு அக்காரணிகளில் யாதாயினும் ஒன்று எவ்வகையில் காரணமாக அமைகின்றது என்பதனை விரிவாக விளக்குக.
(15 புள்ளிகள்)

03. "இலங்கையில் மிக நீண்டகாலமாக இடம்பெற்றுவந்துள்ள அக மற்றும் புற விசைக் காரணிகளின் விளைவே இன்றைய இலங்கையின் தரைத்தோற்ற அமைப்பாகும்." இக்கூற்றினை நியாயப்படுத்த பேராசிரியர் குலரெத்தினம் அவர்கள் முன்வைத்த முக்கிய கருத்துக்களை விளக்குக.
(25 புள்ளிகள்)

## பகுதி – I

04.(அ) இலங்கையின் உழவர் விவசாயத்துறையானது பிரித்தானியர்களின் ஆட்சிக்காலத்தில் எதிர்கொண்ட பிரச்சினைகளை விளக்குக.

(15 புள்ளிகள்)

(ஆ) சுதந்திரத்தின் பின்னர் இலங்கை அரசாங்கங்கள் உழவர் விவசாயத்துறையை விருத்தி செய்வதற்காக மேற்கொண்ட நடவடிக்கைகளை விளக்குக.

(10 புள்ளிகள்)

05.(அ) கட்டில்லா வர்த்தக வலையம் (Free trade Zone) என்பதனால் கருதப்படுவது யாது?

(05 புள்ளிகள்)

(ஆ) கட்டில்லா வர்த்தக வலையம் இலங்கையில் அறிமுகப்படுத்தப் பட்டமைக்கான அவசியங்கள் யாவை?

(08 புள்ளிகள்)

(இ) கட்டில்லா வர்த்தக வலைய அறிமுகமானது இலங்கையின் கைத்தொழிற்துறை வளர்ச்சிக்கு எவ்வகையில் பங்களிப்பு செய்துள்ளது என்பதனை சுருக்கமாக விளக்குக?

(12 புள்ளிகள்)

06. பின்வருவனவற்றுள் யாதாயினும் இரண்டினிற்கு சிறுகுறிப்பு எழுதுக.

(1) இலங்கையின் நகராக்கவிருத்தியும் சேரிப்புற உருவாக்கமும்.
(2) இலங்கையில் குடித்தொகை அதிகரிப்பும் - வறுமையும்
(3)இலங்கையில் அண்மையில் இடம் பெற்ற இயற்கை அனர்த்த நிகழ்வுகள்.

(12.5x2 புள்ளிகள்)

*****